**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | 19/04/2024 | முதல் | 23/04/2024 |
| அறிக்கை எண் : | 032/ 2024 | வெளியீட்டு நாள் : | 18/04/2024 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (13.04.2024 **முதல்** 17.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/04 | 14/04 | 15/04 | 16/04 | 17/04 | **தேதி** | **நாள்-1** 19/04 | **நாள்-2** 20/04 | **நாள்-3** 21/04 | **நாள்-4** 22/04 | **நாள்-5** 23/04 |
| 9.4 | 5.8 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 1 |
| 36 | 35 | 37 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 38 | 39 | 38 | 39 |
| 25 | 25 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 6 | 4 | 5 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 2 | 3 | 3 |
| 82 | 83 | 72 | 80 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 61 | 41 | 64 | 41 | 64 | | 20 | 30 | 20 | 20 | 20 |
| 6 | 7 | 10 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 10 | 8 | 12 |
| தென் மேற்கு | வட கிழக்கு | தெற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 19 மற்றும் 23 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக் கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக் கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். பகல் நேரங்களில் மாட்டு கொட்டகைகளின்

முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

**விவசாயம் :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (19.04.2024 முதல் 23.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், தக்காளி, கால்நடை.**

**நெல்:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் தற்போது நஞ்சையில் புழுதி விதைத்த மானாவாரி நெல் பயிர்களில் உர மேலாண்மை செய்வது ஏற்ற தருணமாகும். விவசாயிகள் ஒரு எக்டருக்கு பொதுவான உர அளவாகிய 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்துக்களை இட வேண்டும் மேலும் தழைச்சத்து 25 கிலோ சாம்பல்சத்து உரத்தினை 12 ½ கிலோ வீதம் பயிர்முளைத்த 20 - 25 நாட்களில் முதலிலும் மீண்டும் 40 - 45 ஆம் நாட்களில் மறுமுறையும் இடவேண்டும்.

**தக்காளி:**

தக்காளிப் பயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈக்களின் தாக்குதலால் இலையின் மேற்பரப்பில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் காணப்படும்.

இலைகள் மஞ்சளாக மாறும், இலைகள் அடிப்புறத்தில் சுருண்டு பிறகு காய்ந்து விழுந்துவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 6 கிராம் என்ற விகிதத்தில் அசிட்டமிபிரைடு மற்றும் 10மில்லி ஒட்டும்பசை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையானது கால்நடைகளுக்கு தோல்பகுதியில் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும். மேய்ச்சலுக்காக கால்நடைகளை நீண்ட தூரம் நடக்க வைக்க வேண்டாம். கால்நடைகளுக்கு அதிக அளவிலான பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனங்களை கொடுக்கவும். மேலும் கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் வேளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்.

.